**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, NAMAKKAL**

**O.S.No.546/2024**

**30.03.2026**

**P.W.2 – திரு. கார்த்திக்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு இவ்வழக்கில் சாட்சி சம்மன் வரவில்லை. என் அம்மா கேட்டு கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்து தங்களுக்ககு பாத்தியப்பட்டதென என் அம்மாவும், பெரியம்மாவும் இவ்வழக்கு போட்டுள்ளார்கள். தாவா சொத்தை என் தாத்தாவும், பாட்டியும் சேர்ந்து சம்பாரித்து என் பாட்டி லட்சுமியம்மாள் பேரில் கிரையம் வாங்கினார்கள். அந்த சொத்தை பொறுத்து லட்சுமியம்மாள் 06.03.2009ம் தேதி வா.சா.ஆ.20 மூலம் 1ம் பிரதிவாதி அருண்ராஜ்க்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பொய்யான ஆவணம். 2011ல் வில்லங்கம் பார்த்தபோது தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ஏமாற்றி எழுதி வாங்கிய விவரம் எங்களுக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.3 தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த பத்திரத்தில் மோசடியாக தன்னிடம் தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டதாக வாசகங்கள் இல்லை. அந்த ஆவணத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி கொடுத்ததை ஒப்புக்கொண்டு தான் ரத்து செய்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். மோசடியாக தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கியதாக வாசகம் இல்லை. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் வா.சா.ஆ.3 ரத்து பத்திரம் ஆகியவை செல்லாது என பரிகாரம் கேட்டு பிரதிவாதிகள் நாமக்கல் டி.மு.

கோர்ட்டில் ஓ.எஸ்.50/2017 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாணை பிறந்துள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தாயார் தரப்பில் நான் சாட்சியாக இருந்தேன். அந்த வழக்கில் நான் என் பெரியம்மாவிடமிருந்து வாங்கிய வா.சா.ஆ.4 அடமானப்பத்திரமும் செல்லாது என பரிகாரம் கேட்கப்பட்டு அந்த பரிகாரமும் பிரதிவாதிகளுக்கு வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஓ.எஸ்.50/2017 என்ற வழக்கில் பிறந்த தீர்ப்பாணையை எதிரித்து நாங்கள் நாமக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். அந்த மேல்முறையீடு ஏ.எஸ்.25/2023-ம் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு எஸ்.ஏ.456/2025 தாக்கல் செய்தோம். அந்த 2வது மேல்முறையீட்டிலும் என் தாயார் பெயரில் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கு சங்கதிகள் பற்றி சொல்லவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் என் தாயார் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் செல்லாது என தீர்ப்பு ஏற்பட்ட பிறகும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. 06.03.2009ம் தேதி 2 செட்டில்மெண்ட் ஆவணங்களை வெவ்வேறு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் ஒரு பதிவு அலுவலகம் திருச்சி ரோட்டிலும், மற்றொரு பதிவு

அலுவலகம் மோகனூர் ரோட்டிலும் இருந்தது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் செட்டில்மெண்ட்டை ரத்து செய்வதற்கு என் பாட்டி லட்சுமியம்மாளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. சொத்தில் எந்த உரிமையும் இல்லாத லட்சுமியம்மாளுக்கு என் தாயார் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே, தாக்கல் செய்யப்பட்ட ஓ.எஸ்.50/2017 வழக்கு சம்பந்தப்பட்ட 2வது மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டபடியால் இவ்வழக்கு முரண்தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எல்லா வழக்கு விவரங்கள் தெரியும் என்றும், இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத சங்கதிகளை சொல்லி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.